(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. **109**.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2016 ஒக்தோபர் 25, செவ்வாய்க்கிழமை பி.ப.1.00 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ திலங்க சுமதிபால,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ ரணில் விக்கிரமசிங்க,** பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்

**கௌரவ (திருமதி) தலதா அதுகோரல,** வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சர்

**கௌரவ ஜோன் அமரதுங்க,** சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரும் காணி அமைச்சரும்

**கௌரவ மஹிந்த அமரவீர,** கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) சரத் அமுனுகம,** விசேட பணிப்பொறுப்புக்களுக்கான அமைச்சர்

**கௌரவ கயந்த கருணாதிலக்க,** பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சரும் அரசாங்கக் கட்சி முதற் கோலாசானும்

**கௌரவ அகில விராஜ் காரியவசம்,** கல்வி அமைச்சர்

**கௌரவ லக்ஷமன் கிரிஎல்ல,** உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரும் பாராளுமன்றச் சபை முதல்வரும்

**கௌரவ மனோ கணேசன்,** தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர்

**கௌரவ தயா கமகே,** ஆரம்பக் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ தயாசிறி ஜயசேகர,** விளையாட்டுத்துறை அமைச்சர்

**கௌரவ நவின் திசாநாயக்க,** பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ எஸ். பீ. திசாநாயக்க,** சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சர்

**கௌரவ எஸ். பீ. நாவின்ன,** உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,** வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சர்

**கௌரவ ஏ. டி. சுசில் பிரேமஜயந்த,** விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்

**கௌரவ றிஸாட் பதியுதீன்,** கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்துமபண்டார,** பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ (திருமதி) சந்திராணி பண்டார,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ பைஸர் முஸ்தபா,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ சாகல ரத்நாயக்க,** சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க,** மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) விஜயதாஸ ராஜபக்ஷ,** நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்

**கௌரவ மலிக் சமரவிக்ரம,** அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்

**கௌரவ மஹிந்த சமரசிங்க,** திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில்பயிற்சி அமைச்சர்

**கௌரவ டபிள்யூ. டீ. ஜே. செனெவிரத்ன,** தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர்

**கௌரவ விஜித் விஜயமுனி சொய்சா,** நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ டி.எம். சுவாமிநாதன்,** சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ரஊப் ஹகீம்,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர்

**கௌரவ அப்துல் ஹலீம்,** தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கபீர் ஹஷீம்,** அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ பி. ஹரிசன்,** கிராமியப் பொருளாதார விவகாரங்கள் பற்றிய அமைச்சர்

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா,** பிரதேச அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ வசந்த அலுவிஹாரே,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரீ. பீ. ஏக்கநாயக்க,** காணி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டிலான் பெரேரா,** நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நிரோஷன் பெரேரா,** தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஏ. டீ. பிரேமதாச,** கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) விஜயகலா மகேஸ்வரன்,** சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வீ.எஸ். இராதாகிருஷ்ணன்,** கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ருவன் விஜேவர்தன,** பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ திலிப் வெதஆரச்சி,** கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சுஜீவ சேனசிங்க,** சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வசந்த சேனாநாயக்க,** நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர்

**கௌரவ எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,** புனர்வாழ்வளிப்பு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அசோக் அபேசிங்க,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் பிரதி அமைச்சர்

**கௌரவ லஸந்த அலகியவன்ன,** மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ பைஸால் காசிம்,** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ துனேஷ் கன்கந்த,** அனர்த்த முகாமைத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) அனோமா கமகே,** பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ அநுராத ஜயரத்ன,** மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பிரதி அமைச்சர்

**கௌரவ (திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன,** வலுவாதார அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் பிரதி அமைச்சர்

**கௌரவ பாலித குமார தெவரப்பெரும,** உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,** வெளிநாட்டலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ எச்.ஆர். சாரதீ துஷ்மந்த,** நீதி பிரதி அமைச்சரும் புத்தசாசன பிரதி அமைச்சரும்

**கௌரவ கருணாரத்ன பரணவிதான,** பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக பிரதி அமைச்சர்

**கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,** பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ அஜித் பி. பெரேரா,** மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி பிரதி அமைச்சர்

**கௌரவ லக்ஷமன் வசந்த பெரேரா,** பெருந்தோட்ட கைத்தொழில் பிரதி அமைச்சர்

**கௌரவ நிமல் லான்சா,** உள்நாட்டலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ இரான் விக்கிரமரத்ன,** அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ துலீப் விஜேசேகர,** தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ அமீர் அலி சிஹாப்தீன்,** கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர்

---

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ ரோஹித அபேகுணவர்தன**

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன**

**கௌரவ சிசிர குமார அபேசேகர**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ ஆனந்த அலுத்கமகே**

**கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே**

**கௌரவ அ. அரவிந்த் குமார்**

**கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி**

**கௌரவ (திருமதி) கீதா சமன்மலீ குமாரசிங்ஹ**

கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்

கௌரவ சந்திரசிறி கஜதீர

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில

கௌரவ நிஹால் கலப்பத்தி

கௌரவ தினேஷ் குணவர்தன

கௌரவ பந்துல குணவர்தன

கௌரவ எட்வட் குணசேகர

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர

கௌரவ எஸ். எம். சந்திரசேன

கௌரவ டி.வீ. சானக

கௌரவ சிசிர ஜயகொடி

கௌரவ மலித் ஜயதிலக

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ

கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ லக்கி ஜயவர்தன

கௌரவ பிரேமலால் ஜயசேகர

கௌரவ மயில்வாகனம் திலகராஜா

கௌரவ க. துரைரெட்ணசிங்கம்

கௌரவ ஜனக பண்டார தென்னகோன்

கௌரவ எம்.எஸ். தௌபீக்

கௌரவ சிறினால் டி மெல்

கௌரவ பியல் நிசாந்த த சில்வா

கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா

கௌரவ அநுர திசாநாயக்க

கௌரவ மயந்த திசாநாயக்க

கௌரவ விமலவீர திசாநாயக்க

கௌரவ வீரகுமார திசாநாயக்க

கௌரவ டக்ளஸ் தேவானந்தா

கௌரவ முஹமட் நவவி

கௌரவ வாசுதேவ நாணாயக்கார

கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ புத்திக பத்திறண

கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண

கௌரவ கே.கே. பியதாஸ

கௌரவ சனத் நிசாந்த பெரேரா

கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து

கௌரவ அசோக்க பிரியந்த

கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர

கௌரவ எஸ். பிரேமரத்ன

கௌரவ பந்துல லால் பண்டாரிகொட

கௌரவ தாரக்க பாலசூரிய

கௌரவ விஜித பேருகொட

கௌரவ முஹம்மது இப்ராஹிம் முஹம்மது மன்சூர்

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ அப்துல்லா மஹரூப்

கௌரவ திலக் மாரபன

கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க

கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரன

கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்

கௌரவ பிமல் ரத்நாயக்க

கௌரவ லொஹான் ரத்வத்தே

கௌரவ பிரசன்ன ரணதுங்க

கௌரவ பிரசன்ன ரணவீர

கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ ஹர்ஷன ராஜகருணா

கௌரவ நாமல் ராஜபக்ஷ

கௌரவ மஹிந்த ராஜபக்ஷ

கௌரவ அங்கஜன் இராமநாதன்

கௌரவ ஜானக வக்கும்புர

கௌரவ விதுற விக்கிரமநாயக்க

கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன

கௌரவ ஏ.ஏ. விஜேதுங்க

கௌரவ லக்ஷ்மன் ஆனந்த விஜேமான்ன

கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம

கௌரவ சமிந்த விஜேசிறி

கௌரவ கஞ்சன விஜேசேகர

கௌரவ ஹேஷான் விதானகே

கௌரவ ச. வியாழேந்திரன்

**கௌரவ விமல் வீரவங்ச**

**கௌரவ குமார வெல்கம**

**கௌரவ சி. சிறீதரன்**

**கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்**

**கௌரவ (திருமதி) சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா**

**கௌரவ சந்தித் சமரசிங்க**

**கௌரவ ராஜவரோதயம் சம்பந்தன்,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்**

**கௌரவ (டாக்டர்) சி. சிவமோகன்**

**கௌரவ முத்து சிவலிங்கம்**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ மாவை சோ. சேனாதிராசா**

**கௌரவ சத்துர சந்தீப சேனாரத்ன**

**கௌரவ செஹான் சேமசிங்க**

**கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி**

**கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி**

**கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்**

**கௌரவ கனக ஹேரத்**

திரு. நீல் இத்தவல, பதில் பாராளுமன்ற செயலாளர் நாயகம்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. சபாநாயகரின் அறிவித்தல்கள்:** பிரதிச் சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்:— அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் **"சேர்பெறுமதி வரி (திருத்தம்)"** எனும் சட்டமூலத்திற்கெதிராக சவாலுக்குட்படுத்தப்பட்ட மனு சம்பந்தமாக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு கௌரவ சபாநாயகருக்கு கிடைக்கப்பெற்றுள்ளதென்பதை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகிறேன்.

இச்சட்டமூலமோ அல்லது இச்சட்டமூலத்தின் எந்தவொரு ஏற்பாடுகளுமோ அரசியலமைப்புக்கு முரணானது அல்ல என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு இன்றைய கூட்ட நடவடிக்கைகள் பற்றிய அதிகார அறிக்கையில் பதிப்பிட வேண்டுமென நான் கட்டளையிடுகின்றேன்.

**2. பத்திரங்கள் சமர்ப்பணம்:** (1) இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம், 2013 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் XX ஆம் பகுதியையும், நான்காவது தொகுதியின் XI ஆம் பகுதியையும்; மற்றும் 2014 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் XIV, XV மற்றும் XVI ஆம் பகுதிகளையும், மூன்றாவது தொகுதியின் IV ஆம்

பகுதியையும், நான்காவது தொகுதியின் VIII, IX மற்றும் X ஆம் பகுதிகளையும் கௌரவ பிரதிச் சபாநாயகர் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கைகள் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(2) உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2015 ஆம் ஆண்டுக்கான கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்று அறிக்கையைச் சமர்ப்பித்து, மேற்படி அறிக்கை வலுவாதார அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2014 ஆம் ஆண்டுக்கான இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து, மேற்படி அறிக்கையை சர்வதேசத் தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2015 ஆம் ஆண்டுக்கான பதுளை மாவட்டச் செயலகத்தின் செயற்றிறன் அறிக்கையும் கணக்குகளையும் சமர்ப்பித்து, மேற்படி அறிக்கை உள்ளக நிருவாகம் மற்றும் அரச முகாமைத்துவம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர், மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் ( அத்தியாயம் 52) 32 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 22 ஆம் பிரிவின் கீழ், வெளிநாட்டு மதுபான இறக்குமதி மற்றும் அவற்றின் மீது மதுவரியினை விதித்தல் தொடர்பிலான சட்டதிட்டங்களை விதிப்பது தொடர்பாக நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2016 ஆகஸ்ட் 26 ஆந் திகதிய 1981/87 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையைச் சமர்ப்பித்து மேற்படி கட்டளையை அரசாங்க நிதி பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2014 ஆம் ஆண்டுக்கான இலங்கை தேசிய நீரியல் வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து, மேற்படி அறிக்கையை வலுவாதார அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(7) உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்கான தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கைககளைச் சமர்ப்பித்து, மேற்படி அறிக்கைகளை கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(8) உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்,

(i) 2012 ஆம் ஆண்டுக்கான தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும்

(ii) 2013 ஆம் ஆண்டுக்கான நிர்மாணம் பயிற்சியளிப்பு அபிவிருத்திக்கான நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை.

ஆகியவற்றைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கைகளை சுகாதாரம் மற்றும் மனித சேமநலம், சமூக வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

( 9 ) உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2015 ஆம் ஆண்டுக்கான நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் செயலாற்றல் அறிக்கையைச் சமர்ப்பித்து, மேற்படி அறிக்கையை பெண்கள் மற்றும் பால்நிலை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(10) உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர், 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 (1) ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி தொடர்பில் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2016 ஆகஸ்ட் 23 ஆம் திகதிய 1981/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட மேற்படி கட்டளையை அரசாங்க நிதி மற்றும் பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுக்களுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது..

**3. மனுக்கள்:**

(1) (i) ஹோமாகம, மாகம்மன, இல. 154/2 இல் வதியும் திரு. ஏ.ஏ.டி.பி. அமரதுங்கவினது 2016.06.21 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(ii) ரனால, நவகமுவ, இல. 01 இல் வதியும் திருமதி பி.ஜி. விமலாவதீயினது 2016.06.18 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ சுஜீவ சேனசிங்க சமர்ப்பித்தார்.

(2) ராகம, நெலிகம, இல. 361 இல் வதியும் திருமதி டி. ரோஹினீ சுவர்ணமாலியினது 2016.09.26 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ லஸந்த அலகியவன்ன சமர்ப்பித்தார்.

(3) (i) குருணாகல், ஜயந்திபுர, இல. E - 92 - பீ யில் வதியும் திருமதி ஐ.எஸ். கலபிட்டகெதரவினது 2016.08.15 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) யட்டிகல்ஒலுவ, கெத்கெட்டுஹேன, இல. 52 இல் வதியும் திரு. பி.எல். ஹேமசிரி விஜேவர்தனவினது 2016.08.26 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iii) பொல்கஹவெல, வெல்லேவ, பன்சல வீதியில் வதியும் திருமதி எஸ்.எம். வினிதா சேனாதிபதியினது 2016.09.30 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ அசோக் அபேசிங்க சமர்ப்பித்தார்.

(4) எஹலியகொட, புளுகஹபிட்டிய, இல. 326 பீ 02 இல் வதியும் திரு. எச்.ஏ.எஸ். பொன்சேக்காவினது 2015.11.23 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ கருணாரத்ன பரனவிதான சமர்ப்பித்தார்.

(5) பன்னிபிட்டிய, ஹிரிபிட்டிய, இல. 63/6 இல் வதியும் திரு. சீ.ஆர். யட்டிகம்மனவினது 2016.01.25 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ பந்துல குணவர்தன சமர்ப்பித்தார்.

(6) கெஸ்பேவ, மாவித்தர, ஹொரண வீதி, இல. 6/10 இல் வதியும் திரு. எம்.டி. தயானந்தவினது 2016.09.05 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சிறினால் டி மெல் சமர்ப்பித்தார்.

(7) மெதிரிகிரிய, மஹ அம்பகஸ்வெவ, யாய II, இல. 94 இல் வதியும் திருமதி பி.வி. பத்மலதாவினது 2016.08.14 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ அநுர சிட்னி ஜயரத்ன சமர்ப்பித்தார்.

(8) (i) பட்டபொல, மஹவத்த, இல. 12 இல் வதியும் திரு. எச்.எம். கருணாதுங்க 2016.08.03 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) கொழும்பு 05, கிருள வீதி, இல. 505 எனும் இடத்தில் சேவையாற்றும் திரு. எம்.எச்.கே. உதயரத்னவினது 2016.09.02 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iii) கொழும்பு 05, கிருள வீதி, இல. 505 எனும் இடத்தில் சேவையாற்றும் திரு. எம்.எச்.கே. உதயரத்னவினது 2016.09.02 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா சமர்ப்பித்தார்.

(9) கல்நேவ இலங்கை வங்கிக் கிளையில் பணி புரியும் திரு. டப்ளியூ.எம். வீரசேகரவினது 2016.08.25 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ இஷாக் ரஹுமான் சமர்ப்பித்தார்.

25அ ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய மேற்படி மனுக்கள் பொது மனுக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**4. காணி (பராதீனப்படுத்தல் மீதான மட்டுப்பாடுகள்) (திருத்தம்):** நிதி அமைச்சர் சார்பாக உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 2014 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, காணி (பராதீனப்படுத்தல் மீதான மட்டுப்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

சட்டமூலம் 2016 நவெம்பர் மாதம் 10 ஆம் திகதி வியாழக்கிழமை இரண்டாவது தடவையாக மதிப்பிடப்பெறுமாறும், அச்சிடப்படுமாறும் உரிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படுமாறும் கட்டளையாயிற்று.

**5. சட்டமூலம் கொண்டுவர அனுமதி:** "சரவணபவன் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்" என்னும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக என கௌரவ எம்.ஏ. சுமந்திரன் பிரேரித்தார். கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன் அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாவது முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

47 (5) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய அறிக்கையிடுவதற்காக சட்டமூலம் சமூகவலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**6. சட்டமூலம் கொண்டுவர அனுமதி:** "மஹிபால ஹேரத் ஜனசஹன மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்" என்னும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக என கௌரவ செஹான் சேமசிங்க பிரேரித்தார். கௌரவ நாமல் ராஜபக்ஷ அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாவது முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

47 (5) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய அறிக்கையிடுவதற்காக சட்டமூலம் சமூகவலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**7. சட்டமூலம் கொண்டுவர அனுமதி:** "மைத்திரிபால சிறிசேன லக்தரு திரிய மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்" என்னும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக என கௌரவ மலித் ஜயதிலக பிரேரித்தார். கௌரவ அங்கஜன் ராமநாதன் அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாவது முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

47 (5) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய அறிக்கையிடுவதற்காக சட்டமூலம் சமூகவலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**8.** கௌரவ புத்திக பத்திறண , கௌரவ லக்கி ஜயவர்தன அனுவதிக்க சமர்ப்பித்த பிரேரணை,—

கௌரவ துலீப் விஜேசேக்கர,—நீடித்து நிலைக்கக்கூடிய அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகள் 2030 நிகழ்ச்சிநிரல் மீதான பாராளுமன்றத்தின் தெரிகுழு:— ஐக்கியநாடுகள் பொதுச்சபை அதன் A/RES/70/1 தீர்மானமானது இலட்சியமான பதினேழு நீடித்து நிலைக்கக் கூடிய அபிவிருத்தி இலக்குடன், (SDGs) நீடித்து நிலைக்கக்கூடிய அபிவிருத்திக்கான நிகழச்சிநிரல் 2030 ஆரம்பித்துள்ளதாதலாலும்;

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கமும் இத் தீர்மானத்தை அங்கீகரித்ததுடன், இந் நிகழ்ச்சிநிரலை அமுல்படுத்துவதற்காக சலிப்பின்றி பணியாற்றுவதற்கு அர்ப்பணித்துள்ளதாலும்;

நீடித்து நிலைக்கக்கூடிய அபிவிருத்தி இலக்குகள் நீடித்து நிலைக்கக்கூடிய அபிவிருத்தியின் பொருளாதார, சமூக, சுற்றாடல் பரிமாணங்களை ஒன்றாக இணைத்து ஒன்றுக்கொன்று இணைந்த கட்டமைப்பொன்றை உருவாக்குவதனாலும்;

பாராளுமன்றங்களானவை அவற்றின் சட்டமாக்கல், வரவு செலவுத்திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் மேற்பார்வைத் தொழிற்பாடுகள் ஊடாக இந்த இலக்குகளை யதார்த்தமாக்குவதில் முன்னிலையானவையாக உள்ளதாலும்;

இலங்கையில் ஐக்கிய நாடுகளின் 2030 நீடித்து நிலைக்கக்கூடிய அபிவிருத்திக்கான நிகழ்ச்சிநிரலை யதார்த்தமாக்குவதை உறுதிப்படுத்தும் முகமாக, பின்வருன தொடர்பாக விடயங்களைக் கவனிப்பதற்கும் சிபாரிசுகளைச் செய்வதற்கும் பாராளுமன்றத் தெரிகுழு ஒன்று நியமிக்கப்பட வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது:—

(அ) உரிய நிரல் அமைச்சுக்களுடன் கலந்தாலோசித்து தேசிய கொள்கைகளை வகுத்தலும் மற்றும் சட்டங்களை ஆக்குதலும்;

(ஆ) போதிய உள்நாட்டு வளங்களை ஒதுக்குதலும், சர்வதேச நிதி வளங்களைக் கண்டறிதலும்;

(இ) அரசாங்க அமுல்படுத்தும் முகவராலயங்களுக்கிடையே ஒருங்கிணைப்பை மேற்கொள்ளுதல்;

(ஈ) தேசிய, மாகாண மற்றும் உள்ளூராட்சி மட்டங்களில் வலையமைப்பினை ஏற்படுத்தல்;

(உ) அரச - தனியார் பங்காண்மையை ஊக்குவித்தல்;

(ஊ) ஐக்கிய நாடுகள் முகவரகங்களின் மற்றும் சிவில் சமூக நிறுவனங்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளல்;

(எ) பிராந்திய மற்றும் சர்வதேச மட்டங்களில் நாடுகளிடையே நிபுணத்துவத்தையும் அனுபவத்தையும் பகிர்ந்து கொள்ளல்;

(ஏ) பிரத்தியேக தரவுத்தளத்தை விருத்தி செய்வதுடன் காலத்திற்கு காலம் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல்; மற்றும்

(ஐ) மேற்படி விடயங்களுடன் தொடர்புடைய அல்லது நேர்விளைவான எல்லா விடயங்களையும் பரிசீலித்தல்.

2. (அ) குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகரால் நியமிக்கப்படுதல் வேண்டும்; மற்றும்

(ஆ) பாராளுமன்ற நிலையியற் கட்டளை இலக்கம் 95 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், குழுவானது பதினைந்திற்கும் (15) இற்கும் மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. குழுவானது,

(அ) அதன் கூட்ட நடபெண்ணை நிர்ணயிப்பதற்கும்;

(ஆ) மேலே சொல்லப்பட்ட விடயங்களை முழுமையாகப் பரிசீலனை செய்வதற்கு அவசியமென குழு கருதுகின்றவாறாக எவரேனும் ஆளை அதன் முன் தோன்றுமாறு அழைப்பதற்கும், ஏதேனும் ஆவணத்தை அல்லது பதிவை அதன் முன் கொண்டுவருமாறு எவரேனும் ஆளை வேண்டுவதற்கும் அத்தகைய எழுத்திலான அல்லது வாய்மூலமான எல்லாச் சான்றுகளையும் பெறுவதற்கும்;

(இ) குழுவுக்கு உதவி வழங்குவதற்காக தொடர்புடைய துறைகளில் விசேடத்துவம் பெற்றவர்கள் மற்றும் நிபுணத்துவம் பெற்றவர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும்; மற்றும்

(ஈ) பாராளுமன்றத்தின் ஏதேனும் ஒத்திவைப்பினால் தடைப்படாது காலத்திற்குக் காலம் அமர்வுகளை நடத்தி இடைக்கால அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும் அமர்வுகளை நடத்துவதற்கும்;

தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. குழுவானது அதனது முதல் கூட்டத்திலிருந்து ஒரு வருடத்தினுள் அல்லது ஒரு பாராளுமன்றத்தால் வழங்கப்படும் அத்தகைய மேலதிக ஒரு காலப்பகுதிக்குள் பாராளுமன்றத்திற்கு அதன் அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும் .[பா. 187/16]

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**9. ஒத்திவைப்பு ( ஆகஸ்ட் 9 ஆம் திகதிய "கோப்" அறிக்கையை நிறைவேற்றுத் துறையின் கவனத்திற்கு கொண்டுவருதல்) :** "இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" என சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப் பெற்று விவாதிக்கப்பட்டது.

"கௌரவ லக்கி ஜயவர்தன தலைமை தாங்குவாராக" என நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சருமானவர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 3.25 மணிக்கு கௌரவ லக்கி ஜயவர்தன தலைமை தாங்கினார்.)

"கௌரவ எட்வட் குணசேகர தலைமை தாங்குவாராக" என விளையாட்டுத்துறை அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 4.10 மணிக்கு கௌரவ எட்வட் குணசேகர தலைமை தாங்கினார்.)

(பி.ப. 5.50 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

அவ்வேளை நேரம் பி.ப. 7.30 மணியாகிவிடவே, பிரதிச் சபாநாயகரினால் வினாவின்றி பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது.

அதன்படி பாராளுமன்றம் 2016 ஒக்தோபர் மாதம் 07 ஆம் திகதிய சபைத் தீர்மானத்திற்கு ஏற்ப, 2016 ஒக்தோபர் மாதம் 26 ஆம் திகதி புதன்கிழமை மு.ப 10.30 மணி வரை பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது.